DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the Court of the Judicial Magistrate No.II, Mayiladuthurai

**CC. No. 104/2025**

**Deposition of LW2 examined as PW2** (recovery and eyewitness)

Dt. 10.06.2025

| | |
|---|---|
| Name | மணிகண்டன்(VAO கஞ்சாநகரம்) |
| Father's/Husband's Name | மெய்யழகன் |
| Village | கஞ்சாநகரம் |
| Taluk | |
| Age | 34/2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day 10.06.2025

(A1,A2 present)

**முதல் விசாரணை**

நான் தற்போது கஞ்சாநகர கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 30.12.2023 அன்று இரவு 8.00 மணியளவில் எனக்கு கஞ்சாநகரம் பேருந்து நிறுத்தம் அருகே ரேசன்அரிசி பதுக்கி வைக்கபட்டிருப்பதாக கிடைத்த ரகசிய தகவலின் அடிப்படையில் அங்கு சென்று சுமார் 3/4 மணி நேரம் தேடி காவேரி கரை முதல் சந்தில் ஸ்ரீராம் பெல்ட்பென்சிங் கடைக்கு பின்பகுதியில் கீற்று கொட்டகையில் பதுக்கி வைக்கப்பட்டிருந்தது தெரியவந்தது. அதன் பிறகு தரங்கம்பாடி வட்டாட்சியர் அலுவலருக்கும் ,தரங்கம்பாடி வட்டவழங்கல் அலுவலருக்கும் தகவல் தெரிவித்தேன். வட்டவழங்கல் அலுவலர் விஜயகுமார் அவர்கள் இரவு 9.30 மணியளவில் சம்பவ இடத்திற்கு வந்துவிட்டார். அவரும் நானும் மொபைல் வெளிச்சத்தில் கீற்று கொட்டகையினுள் ஆய்வு செய்த போது சுமார் 300 வெள்ளை மூட்டைகளில் ரேசன் அரிசி காணப்பட்டது. ஒவ்வொரு மூட்டையும் சுமார் 50 கிலோ எடை கொண்டது. சாக்கு தைப்பதற்காக தையல்மிசின், மூட்டைகளை எடை போடுவதற்கான எடை மிசின் ஆகியவைகள் கீற்று கொட்டகைக்குள் இருந்தது. அதற்கு வெளியே டாடா ஏசி வாகனத்தில் 10 மூட்டை ரேசன் அரிசி பதுக்கி வைக்கப்பட்டிருந்தது. அதன்பிறகு கீற்று கொட்டகையின் உரிமையாளர் யார் என்று வட்டவழங்கல் அதிகாரி விசாரணை செய்த போது அதே கிராமத்தை சேர்ந்த மோகன்தாஸ் என்று தெரியவந்து அவரை விசாரணை செய்த போது அதே கிராமத்தை சேர்ந்த அப்பு என்கிற சத்தியசீலன் மற்றும் பிரசாந்த் என்பவருக்கு மாத வாடகை ரூ.3000/- வீதம் வாடகைக்கு விடப்பட்டிருப்பதாக கூறினார். டாடா ஏசி வாகனம் TN51 AZ3935 பதிவெண் கொண்ட வாகனத்திற்கு உரிமையாளர் ஆஜர் எதிரிகள் தான் என்று தெரிந்து கொண்டேன். மறுநாள் காலை 8,9 மணியளவில் மொத்தம் 310 அரிசி மூட்டைகளை கிடாரங்கொண்டான் சேமிப்பு கிடங்கில் வட்டவழங்கல் அலுவலர் ஒப்படைத்தார். மேற்கண்ட தையல்மிசின், எடைமிசின் டாடா ஏசி வாகனம்

10.6.25

ஆகியவைகளை காவல் ஆய்வாளரிடம் வட்டவழங்கல் அலுவலர் ஒப்படைத்தார். தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் கைப்பற்றுதல் மகசரில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையது தான். **கைப்பற்றுதல் மகசரில் உள்ள இரண்டாவது கையொப்பம் மட்டும் அ.சா.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்குவிசாரணை**

நான் எழுத்துமூலமான புகார் எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரிதான். சம்பவ இடத்தில் பொது மக்கள் யாரும் இல்லை என்றால் சரிதான். போலீசார் விசாரணையில் தெரிவித்தது போல் பொது மக்கள் யாரும் சாட்சியாக இருக்க முன்வரவில்லை என்றால் சரிதான். எத்தனை சாட்சிகளிடம் கேட்டார்கள் எத்தனை பேர் முன்வரவில்லை என்றால் 10 நபர்களிடம் கேட்டு முன்வரவில்லை. மேற்படி 10 நபர்களின் பெயர் விபரம் எனக்கு தெரியும். காவல் ஆய்வாளர் எத்தனை மணிக்கு வந்தார் என்றால் இரவு 11 மணிக்கு வந்தார். அவரிடம் யார் எப்போது புகார் அளித்தார் என்றால் வட்டவழங்கல் அதிகாரி அன்று இரவே புகார் அளித்தார். கீற்று கொட்டகை பார்த்து எத்தனை மூட்டை என்று எண்ணி நான்தான் சொன்னேன் என்றால் சரிதான். எந்த வரிசையில் அடுக்கப்பட்டிருந்தது என்றால் தென்திசையில் இருந்து வடதிசையில் அடுக்கி வைக்கப்பட்டிருந்தது அதை நான் எண்ணி சொன்னேன். அடுக்கி வைக்கப்பட்டிருந்த திசை விபரங்களை, நான்தான் எண்ணி எண்ணிக்கையை வட்டவழங்கல் அலுவலரிடம் தெரிவித்த விபரத்தை போலீசார் விசாரணையில் குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரிதான். போலீசார் விசாரணையில் டாடா ஏசி வாகனத்தின் பதிவு எண்ணை குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரிதான். சம்பவ இடத்திற்கு வேறு யார் வந்தார்கள் என்றால் மீடியாவை சேர்ந்த நபர்கள் வந்தார்கள். அவர்கள் வீடியோ பதிவு செய்தார்கள். வீடியோ பதிவு செய்த போது ஆய்வாளர் அங்கு இல்லை. வீடியோ பதிவு செய்த விபரத்தை போலீசார் விசாரணையில் குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரிதான். எத்தனை மணிக்கு யார் கைப்பற்றினார்கள் என்றால் இரவு 11 மணிக்கு மேல் காவல் ஆய்வாளர் மணிகண்டன் அவர் தான் வந்து அரிசி மூட்டைகள், டாடாஏசி வாகனம், மூட்டைகள் தைக்கக்கூடிய தையல்மிசின், எடைமிசின் ஆகியவற்றை கைப்பற்றினார். கைப்பற்றியதற்கு ஆய்வாளர் ஆவணம் தயார் செய்தார். அதில் நானும், வருவாய் ஆய்வாளர் மரியஜோசப்பும் கையெழுத்து செய்தோம் என்றால் சரிதான். சொன்ன நாள், நேரத்தில், இடத்தில் அரிசி மூட்டைகள் ஏதும் கைப்பற்றப்படவில்லை என்றாலும் சரியல்ல. புள்ளி விபர கணக்கிற்காக எதிரிகள் மீது போட்ட பொய்வழக்கிற்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றால் சரியல்ல. முதல் விசாரணயைில் சொன்ன தேதி நேரத்தில் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. காவல் நிலையத்தில் வைத்து கையெழுத்து செய்துவிட்டு வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றால் சரியல்ல.

என்னால் எழுதிக்கொள்ளப்பட்டு, எதிரியின் முன்னிலையில் சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது.

10.6.25

நீதித்துறை நடுவர் எண்-11
மயிலாடுதுறை

VAO
01-Ø3(3)3 3
3, Ø(day).